





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 01.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்











We Shine Academy


The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## தமிழக நிகழ்வுகள்

- தமிழக தொழில்துறை சார்பில் "**தொழில் வளர் தமிழ்நாடு**" முதலீடுகள் மற்றும் திறன் மேம்பாட்டு மாநாடு சென்னையில் நடைபெற்றது.
    - இம்மாநாட்டில் முதல்வர் கே.பழனிசாமி முன்னிலையில் **ரூ.5,027 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்** போடப்பட்டது.
    - தொழில் நிறுவனங்களின் குறைகளை தீர்க்கும் வகையில் "Biz buddy" என்ற இணையதளத்தை தமிழக முதல்வர் தொடக்கி வைத்தார்.
    - **செய்தி துளிகள் :**
        - தமிழக அரசால் கடந்த ஜனவரி 23 மற்றும் 24 தேதிகளில் 2வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது.
        - கடந்த ஜீலை மாதம் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக "யாதும் ஊரே", "தொழில் தோழன்" உள்ளிட்ட திட்டங்களை தமிழக முதல்வர் அறிவித்தார்.

## தேசிய நிகழ்வுகள்

- **முதன்முறையாக இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான “ 2 + 2” பேச்சுவார்த்தை டில்லியில் நடைபெற்றது.**
    - இரு நாடுகளின் வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.
    - இந்தியக் குழுவிற்கு வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் தலைமை தாங்கினார்.
    - பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா – ஜப்பான் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.
    - **செய்தி துளிகள் :**
        - “தர்மா கார்டியன்” என்ற பெயரில் இந்தியா – ஜப்பான் இடையே கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெற்று வருகிறது.
        - ஜப்பான் பிரதமர் ஷின் அபே தாராளவாத ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்

## விருதுகள்

- **உடல் உறுப்பு தானம் - சிறந்த மாநிலத்துக்கான விருதை தமிழக அரசு பெற்றது.**
    - தில்லியில் நவம்பர் 30ம் தேதி அன்று 10வது இந்திய உடல் உறுப்பு தான விழா நடைபெற்றது.

We Shine Academy TM

- உடல் உறுப்பு தானத்தை சிறப்பாக செயல்படுத்தும் சிறந்த மருத்துவமனைக்கான விருது சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.
- **செய்தி துளிகள் :**
  - உடல் உறுப்பு தானத்துக்கான விருதை தமிழகம் தொடர்ந்து 5வது முறையாக பெறுகிறது.
  - ரத்ததானம், கண்தானம் ஆகிய பிரிவுகளில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
  - தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக அதிகபட்சமாக தமிழக அரசு ரூ.22 லட்சம் வரை வழங்குகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தெற்காசிய விளையாட்டு போட்டிகள் 2019 டிசம்பர் 1 அன்று தொடங்குகிறது.
  - நேபாள தலைநகர் காத்மாண்டுவில் போட்டிகள் நடைபெற உள்ளன.
  - தெற்காசியாவை சேர்ந்த இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை, பூடான், மாலத்தீவுகள் ஆகிய 7 நாடுகள் கலந்து கொள்கின்றன.
  - தற்போது 3வது முறையாக நேபாளத்தில் நடைபெற உள்ளது.

- **செய்தி துளிகள் :**
  - **1984ம் ஆண்டு காத்மாண்டுவில் முதல் தொற்காசிய போட்டிகள் நடைபெற்றன.**
  - 14 முறை இந்தியா முதலிடம் பெற்றுள்ளது.
  - முதன் முறையாக பாரா கிளைடிங், கோல்ப், காரத்தேஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

## முக்கிய தினங்கள்

- **உலக எய்ட்ஸ் தினம் - டிசம்பர் 1**
  - மையக்கரு = "சமூக பங்களிப்பின் மூலம் எய்ட்ஸ் தடுப்பு பணியில் மாற்றத்தினை ஏற்படுத்துதல்".
  - எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 1988ம் ஆண்டு முதல் ஐ.நா.சார்பில் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - எய்ட்ஸ் HIV என்ற வைரஸ் மூலம் பரவுகிறது.
  - 1981ம் ஆண்டு எச்.ஐ.வி வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

## திருக்குறள்

**குறள் எண் : 34**

அதிகாரம் : அறன் வலியுறுத்தல்

குறள்பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**

ஆகுல நீர பிற.

**விளக்கம்** : ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே, மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

We Shine Academy™